செய்தி வெளியீடு எண்: 200 நாள்: 04.03.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (4.3.2019) சென்னை, எழும்பூர், மகளிர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவை வணங்கி,

மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக, கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிறந்த முறையிலே கரு வளரக்கூடிய அற்புதமான திட்டத்தை துவக்கி வைக்கின்ற சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய **மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பான கருத்துக்களை வழங்கிய
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத் துறை அமைச்சர்
**டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே,**
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர்
**முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே,**

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
**மக்கள் நல்வாழ்வுத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ் அவர்களே,**
மற்றும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளே, மருத்துவர்களே, புதிதாக பணியாணை பெறவிருக்கின்ற உதவி மருத்துவர்களே, கிராம சுகாதார செவிலியர்களே,
மற்றும்
வருகை தந்திருக்கின்ற
பெரியோர்களே! தாய்மார்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
இந்த விழாவிலே நன்றியுரை ஆற்றிவிருக்கின்ற சுகாதாரத் துறை இயக்குநர் அவர்களே,

அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

**“சமுதாயத்தின் அனைத்துக் கட்ட வளர்ச்சிக்கும் சிறந்த ஆரோக்கியம் இன்றியமையாததாகும். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் தரமான மருத்துவ வசதிகளை அளிப்பதே நம்முடைய குறிக்கோளாகும்” என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது. தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், நோய்களைத் தடுப்பதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது.

ஒரு குழந்தை பிறந்தவுடன் 16 பொருட்கள் அடங்கிய **அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்** வழங்கப்படுகிறது. பின்னர் அவர்கள் படிப்பதற்கு ஊக்கத் தொகை, அருகிலேயே பள்ளிக்கூடம், வளர் இளம் பெண்கள் உடல் நலம் பேண சானிடரி நாப்கின், ஊட்டச்சத்து மாவு அளித்தல், இரும்பு சத்து மாத்திரை அளித்தல், திருமண வயது அடைந்த பெண்களுக்கு திருமணம் நிதி உதவி மற்றும் தாலிக்குத் தங்கம், பின்னர் அவர்கள் கருவுற்றவுடன் அரசு சார்பில் வளைகாப்பு மற்றும் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் நிதி உதவி என வாழ்வின் அனைத்து கட்டங்களிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களுக்கு துணை நிற்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை பெருமிதத்துடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையில் நிகழ்த்திய சாதனைகள் பல இருந்தாலும், அதில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ❖ கடந்த 8 ஆண்டுகளில் சுகாதார துறைக்கு 62 ஆயிரத்து 705 கோடியே 17 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, 2019–2020–ஆம் ஆண்டுக்கு 12 ஆயிரத்து 563 கோடியே 83 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.
- ❖ பேறுகாலத்திற்குப் பின் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 8.9.2015 அன்று தொடங்கப்பட்டு, இதுவரை 17 லட்சம் தாய்மார்களுக்கு இப்பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

❖ மகப்பேறு காலத்தில் மகளிரின் ஆரோக்கியத்தைக் காக்க, 11 வகையான சித்த மருத்துவ மூலிகைகள் அடங்கிய அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சித்த மருத்துவத்தை விரும்பும் பெண்களுக்கு மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் இந்த பெட்டகம் வழங்கப்படுகிறது.

❖ தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் உயர்தர மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 28 லட்சத்து 70 ஆயிரம் பயனாளிகள் 5,587 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையின் மூலம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

❖ தற்பொழுது மருத்துவ சிகிச்சைக்கு அளிக்கப்பட்டு வரும் 2 லட்சம் ரூபாய் போதுமானதாக இல்லை என்று கோரிக்கை வைத்தவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு அதனை உயர்த்தித் தர வேண்டும் என்ற பொது மக்களிடமிருந்து கோரிக்கையை ஏற்று, ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து ஐந்து லட்சம் ரூபாயாக மாண்புமிகு அம்மாவின் அரசால் உயர்த்தப்பட்டு, அந்த மக்கள் இன்றைக்கு சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகளின் காரணத்தால், குழந்தை இறப்பு விகிதம், பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் கருவள விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில், தமிழ்நாடு சிறந்த சாதனை படைத்துள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ் தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய இலக்கினை 2016 ஆம் ஆண்டுக்குள் அடைந்த இந்தியாவின் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்ற பெருமையை பெற்றுள்ளது.

❖ கடந்த 7 ஆண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

❖ இதுதவிர 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற வசதிகளுடன் 190 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

- ❖ அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக 1,035 கோடி ரூபாயும், பல்வேறு உபகரணங்களுக்காக 376 கோடி ரூபாயும், மாவட்ட மற்றும் துணை மாவட்ட அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புக்காக 224 கோடியே 13 லட்சம் ரூபாயும், உபகரணங்களுக்காக 82 கோடியே 41 லட்சம் ரூபாயும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது.
- ❖ அரசு மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக ஆயிரத்து 630 கோடியே 40 லட்சம் ரூபாய், மருத்துவ கருவிகளுக்காக 722 கோடியே 26 லட்சம் ரூபாயும் தேசிய நலவாழ்வு குழுமம் வழங்கியுள்ளது.
- ❖ அரசு மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி.ஸ்கேன் போன்ற பல புதிய நவீன உபகரணங்களை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
- ❖ மாண்புமிகு அம்மா அவர்களாலும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக மதுரை மாவட்டம் தோப்பூரில் ஆயிரத்து 264 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் சமீபத்தில் இதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்.
- ❖ இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் முதன்மை மாநிலத்திற்கான விருதை தமிழ்நாடு அரசு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பெற்று வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.
- ❖ 102 இலவச வாகனத் திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்கள் மற்றும் சிகிச்சை பெற்ற சிசுக்கள், மருத்துவமனையிலிருந்து கட்டணமில்லாமல் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் சேவையை அம்மாவின் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். முழுவதையும் சொல்ல வேண்டுமானால் நாட்கள் போதாது. எனவேதான் நான் இங்கே ஒரு சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டு பேசினேன்.

- ❖ வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கருவுற்ற பெண்களுக்கு பேறு காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், சத்தான உணவை உட்கொள்ளவும், அதன் மூலம் எடை குறைவான குழந்தைகள் பிறப்பதை தடுக்கும் வகையிலும், தாய் மற்றும் குழந்தையின் சுகாதார நிலையை மேம்படுத்தும் உயர்ந்த நோக்கத்துடன் கர்ப்பிணி பெண்களுக்காக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நான் முதலமைச்சராக பதவியேற்றவுடன் இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவியை 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தி நான் ஆணையிட்டேன். கடந்த எட்டு ஆண்டுகளில் இத்திட்டத்தில் 56.36 லட்சம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 4 ஆயிரத்து 866 கோடியே 60 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**இந்த நடப்பு ஆண்டில் புதிதாக 508 முதுநிலை மருத்துவ மேற்படிப்பு இடங்கள் நமது மருத்துவக் கல்லூரியில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1758 முதுநிலை மருத்துவ மேற்படிப்பு இடங்கள் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதன்மை வகிக்கின்றது என்ற பெருமையான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.**

**முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகையிலிருந்து கர்ப்பிணிப் பெண்களுக்கு பரவலாக உள்ள இரத்த சோகையைப் போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும், 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புச் சத்து மற்றும் ஊட்டச் சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படும் என்று 2018–19–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, இன்று கர்ப்பிணி தாய்மார்களுக்கு பெட்டகம் வழங்கி இந்தத் திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த திட்டத்தால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 லட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்பெறுவார்கள். இதனால் தமிழ்நாட்டில் பேறுகால தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் இறப்பு விகித குறியீடுகள் மேலும் குறையும்.**

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் அவ்வப்போது புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பும் பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில்,

**இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் இதுவரை 11,003 மருத்துவர்கள், 9,533 செவிலியர்கள் உட்பட 24,736 பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணி அமர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தற்போது 1,883 மருத்துவர்களை தேர்ந்தெடுத்துள்ளது. இவர்களில் 1,300 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குவதை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைத்துள்ளேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.**

**இது தவிர, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 129 இளநிலை உதவியாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குவதை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைத்துள்ளேன்.**

பணி ஆணை பெறுகின்ற மருத்துவர்களும், அமைச்சுப் பணியாளர்களும் மக்களுக்கு செய்யும் சேவையே மகேசனுக்கு செய்யும் சேவை என்பதை நினைவில் கொண்டு சிறந்த முறையில் மக்கள் பணியாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை கேட்டுக் கொள்கிறேன். இன்று பணி ஆணை பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ், தாய்சேய் நலப் பணிகளை திறம்பட செயல்படுத்தி வரும் 9,994 சுகாதார செவிலியர்களுக்கு கையடக்கக் கணினிகள் வழங்கப்படும் என்று 5.7.2017 அன்று நான் அறிவித்தேன். இந்த அறிவிப்பை செயல்படுத்தும் பொருட்டு, இன்று 11,068 கிராம சுகாதார செவிலியர்களுக்கும், தொற்றா நோய் தடுப்பு, கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சை திட்டத்தில் பணியாற்றும் 2,341 செவிலியர்களுக்கும், 20 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கையடக்க கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.**

**சென்னை மாநகராட்சி பகுதியில், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளப்படுகிறது. இதே போன்று மாநிலம் முழுவதும் ஒரே இணையதளம் மூலம் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறை (Civil**

**Registration System) மென்பொருளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று தொடங்கி வைத்துள்ளேன். இதனால் மாநிலத்தில் எந்தப் பகுதியில் வசிக்கும் மக்களும், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழை, எந்த ஒரு இ–சேவை மையத்திலிருந்தோ, வீட்டிலிருந்தோ கணினி மூலமாகவோ அல்லது கணினி மையத்திற்கு சென்றோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

**ஆரம்ப சுகாதார சேவைகளில் ஆய்வகங்களின் பங்கு இன்றியமையாததாகும். நோயை சரியாக கண்டுபிடித்து, சிகிச்சை அளிக்க ஆய்வகங்களின் செயல்பாடு மிக முக்கியமானதாகும். எனவே தான், ஆய்வகங்களுக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும் ஆய்வக நுட்புநர்களை பணியமர்த்தியும், புதிய ஆய்வக உபகரணங்கள் வழங்கியும் இந்த அரசு ஆய்வகங்களை செம்மைப்படுத்தியுள்ளன. மேலும் நோயாளிகளின் ரத்த மாதிரிகள் உயர் ஆய்வக பரிசோதனைக்காக கொண்டு செல்ல, ஆய்வக தகவல் மேலாண்மை அமைப்பு இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வசதி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள ஆய்வகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது.**

**எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்** என்ற மாண்புமிகு அம்மாவின் எண்ணத்திற்கிணங்க மருத்துவத்துறையில் தற்பொழுது நடைமுறையில் உள்ள அனைத்து நவீன சிகிச்சைகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு இலவசமாகவும், குறைந்த கட்டணத்திலும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நவீன வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தி வருகிறது. மக்கள் அனைவரும் இதை பயன்படுத்தி, நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தாய் சேய் நல மருத்துவமனை 175–வது ஆண்டை அடியெடுத்து வைக்கின்ற இந்தத் தருணத்தில், இந்த மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**